**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 9/2014**

**Deposition of Witness for : PW 34**

**Name** : திரு. முஹமத் பலுலுல்லா
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18-11-2022.**

முதல் விசாரணை -

நான் தற்போது திருவாரூர் மாவட்ட குற்ற ஆவண காப்பகத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து 2018ம் ஆண்டு ஓய்வு பெற்றேன். நான் 2009ல் வேட்டவலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்த போது திருவண்ணாமலை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் தானிப்பாடி காவல் நிலைய குற்ற எண் 30/2009 சம்மந்தப்பட்ட பிரேதமான சுவாலியம்மாளின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் விஜயன், ராஜி ஆகியோர் முன்னிலையில் சாட்சிகள் ராஜேஷ், சாந்தா, ஜெயபால், ஏழுமலை, ஜானகி இவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி பிரேதத்தின் மீது 13.1.2009 காலை 7 மணி முதல் 9 வரை பிரேத பரிசோதனை அறிக்கை பதிவு செய்து தலைமைக் காவலர் செல்வம் மூலம் பிரேதத்தை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பிக் கொண்டேன். 14.1.2009 காலை 8 மணி முதல் 10 மணி வரை தோலா என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார், காசி, எம்.ஜி, ஏழுமலை, சாப்லான், காலுன் ஆகியோர் முன்னிலையில் சாட்சிகள் மூர்த்தி, ஏழுமலை, செல்வி மங்கியம்மாள் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத விசாரணை தயாரித்தேன் தலைமைக் காவலர் சேகர் மூலம் பிரேதத்தை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பிக் கொண்டேன். அதன் அசல் மற்றும் நகல் ஆவணங்களை டி.எஸ்.பி. சிவகாமி அவர்களுக்கு அறிக்கை மூலம் அனுப்பிக்கொண்டேன். குப்பாயி (எ) சுவாலியம்மாள் மற்றும் தோலா இவர்களின் பிரேத விசாரணை அறிக்கை முறையே அ.சா.ஆ.31, மற்றும் 32. என்னை கண்காணிப்பாளர் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

13.1.2009 மற்றும் 14.1.2009 ஆகிய தேதிகளில் நான் வேட்டவம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். முதல் தகவல் அறிக்கை தானிப்பாடி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய காவல் நிலைய எல்லைக்குள் வரவில்லை. காவல் துறை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்ய எழுத்து மூலமாக உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், அவ்வாறு நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள சாட்சிகளை நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. காவலர்கள் செல்வம் மற்றும் சேகர் ஆகியோரை நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் வேட்டவலம் காவல் நிலையத்தில் பணிபுரிந்ததால் தானிப்பாடி வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்ய எனக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/- முஹமத் பலுலுல்லா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 9/2014**

**Deposition of Witness for : PW 35**

**Name** : திரு. சாந்தலிங்கம்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18-11-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்ட குற்றப்பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2009 ம் ஆண்டு நான் கிழக்கு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது 12.1.2009ந் தேதி தண்டராம்பட்டு தாலுக்கா போந்தை கிராமத்தில் ஆங்காங்கே வீசப்பட்டிருந்த விஷச் சாராயத்தை குடித்ததின் விளைவாக ஜெயராமன், கோபால்சாமி, குப்பாயி (எ) சுவாலியம்மாள், சேட்டு (எ) கோபால் ஆகியோர் உடல்நிலை பாதிக்கப்பட்டு பல்வேறு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதின் பேரில் தானிப்பாடி காவல் நிலைய குற்ற எண் 30/2009 பிரிவு 302, 328 இதச மற்றும் 41(ரு) டி.என்.கே. ஆக்டின் படி ஒரு வழக்கு பதிவு செய்து கிராமிய காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களி புலன் விசாரணை செய்தார், அந்த புலன் விசாரணைக்கு உதவியாக இருக்கும்படி திருவண்ணாமலை மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் எனக்கு உத்தரவிட்டபடியால் நான் இவ்வழக்கில் 13.1.2009ந் தேதி வேலூர் அரசு மருத்துவமனை சென்று இந்த வழக்கில் சிகிச்சை பலனின்றி இறந்து போன கோபால்சாமி த/பெ. ராஜீவ்காந்தி என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள், செல்வகுமார், ஏழுமலை, ரங்கசாமி, அர்ஜுனன், நாராயணன் ஆகியோர் முன்னிலையில் பிரேதத்தை காலை 10 மணி முதல் 12 வரை ஒரு பிரேத விசாரணை தயாரித்தேன், பிறகு அங்கேயே சாட்சிகள் ஏழுமலை, எரியூட்டி ஏழுமலை, ரங்கநாதன், நாராயணன், மாணிக்கம் ஆகிய சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு பிரேத பரிசோதனை செய்ய வேண்டி கோபால்சாமி என்பவரது பிரேதத்தை காவலர் 446 பொன்முடி என்பவர் மூலம் மருத்துவ அலுவலருக்கு வேண்டுகோள் கடிதத்தின் மூலம்

அனுப்பிக் கொண்டேன். இந்த வழக்கில் காவல் துணை கண்காணிப்பாளர் கிராமியம் என்னை விசாரித்தார்கள். நான் பதிவு செய்த கோபால் சாமியின்பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 33.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

நான் விசாரணை மேற்கொண்ட காவல் நிலையம் வேறு, நான் பணிபுரிந்த காவல் நிலையம் வேறு, காவல் துணை கண்காணிப்பாளர் எழுத்து மூலமாக உத்தரவு பிறப்பிட்ட ஆணையை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்து விட்டேன். பிரேத விசாரணை அறிக்கையில் உள்ள சாட்சிகளை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். காவலரையும் நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புலன் விசாரணை அதிகாரியும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். நான் வேறு காவல் நிலையத்தில் பணிபுரிந்ததால் பிரேத விசாரணை அறிக்கை பதிவு செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. உயரதிகாரியின் உத்தரவுபடி பதிவு செய்தேன். ஏழுமலை, ஏரியூட்டி ஏழுமலை, ரங்கநாதன், நாராயணன் ஆகியோர் வாக்குமூலத்தில் கடைசி இரண்டு வரிகள் பின்னிட்டு சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- சாந்தலிங்கம்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.